# பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 2015 பெப்புருவரி 01 தொடக்கம் 2016 மாச்சு 31 வரையான காலப்பகுதியின் போது திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பாக பரீட்சித்துப் பார்க்கும் மற்றும் புலனாய்வு செய்யும் மற்றும் அறிக்கை அளிக்கும் சனாதிபதி புலனாய்வு ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்னேற்றத்தின் தற்போதைய நிலை

திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பாக பரீட்சித்துப் பார்க்கும் மற்றும் புலனாய்வு செய்யும் சனாதிபதி புலனாய்வு ஆணைக்குழுவின் பரிந்துரைக்களுக்கிணங்க மத்திய வங்கியின் பல தொழிற்பாட்டு விடயப் பரப்புகளின் வெளிப்படைத் தன்மையினையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் வலுப்படுத்துவதற்கு பல எண்ணிக்கையான வழிமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் பல ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை மத்திய வங்கி பொது மக்களுக்கு அறிவிக்கவிரும்புகின்றது.

மத்திய வங்கி தொழிற்படுகின்ற சட்ட ரீதியான கட்டமைப்புத் தொடர்பில் மத்திய வங்கிக்கு ஏற்புடைய பல சட்டங்களை வலுப்படுத்துவதற்கு வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாணயவிதிச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பன தொடர்பில் திருத்தங்கள் தற்போது வகுக்கப்பட்டு வருகின்றன.

திறைசேரி முறிகளுக்காக புதிய ஏல முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதனூடாக அரசாங்கப் பிணையங்கள் வழங்குதலுடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டன. திறைசேரி உண்டியல்களுக்கும் இதனையொத்த முறைமையொன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. விலைக் குறிப்பீடுகளுக்கு முன்னரான கூட்டம் கிரமமாக நடைபெறுவதுடன் ஏல கலண்டர் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு முன்வைக்கப்பட்ட மொத்த தொகையைவிட கூடுதலான தொகையை ஏற்றுக்கொள்ளாத கொள்கை பின்பற்றப்பட்டு வருகின்றது. வழங்கல் செயன்முறையுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளதுடன் தொழிற்பாட்டுக் கையேடு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆற்றல்வாய்ந்த புதிய முதலீட்டுக் கொள்கைக் கூற்றொன்றினையும் முதலீட்டு வழிகாட்டலொன்றினையும் அறிமுகப்படுத்தியதனூடாக ஊழியர் சேம நிதியத்தின் நிதி முகாமைத்துவத் தொழிற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டன. இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காகவும் வெளிப்படைத் தன்மையினையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் மேம்படுத்துவதற்காகவும் அதிகரிக்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளுடன் இணைந்த இற்றைப்படுத்தப்பட்ட தொழிற்பாட்டுக் கையேடொன்று தற்போது செயற்பாட்டிலுள்ளது.

தொடர்புடைய இடர்நேர்வு வெளிப்படுத்துகை நியதிகளின் அடிப்படையில் சட்டத் தொழிற்பாடானது அதிகரித்த வளங்களுடன் வலுப்படுத்தப்பட்டுள்ளதுடன் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடானது அதன் செயற்பரப்பினையும் செறிவினையும் விரிவுபடுத்தியுள்ளது. தகவல் தெரிவித்தல் கொள்கையொன்றும் அனைத்து ஊழியர்களுக்கும் நாணயச் சபை உறுப்பினர்களுக்குமான நன்னடத்தைக் கோவையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்குறித்தவற்றிற்கு மேலதிகமாக, பல உள்ளக ஒழுக்காற்று நடவடிக்கைமுறைகள் முன்னெடுக்கப்படுவதுடன் மத்திய வங்கிக்கும் ஊழியர் சேம நிதியத்திற்கும் நட்டத்தினை ஏற்படுத்துகின்ற விதத்தில் முதனிலை வணிகர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட சட்டத்திற்குப் புறம்பான ஆதாயங்களை மீளப்பெறுவதற்காக சிவில் அறவீட்டு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியினால் பொலிஸ் மா அதிபருக்கு 2016 நவெம்பரில் மேற்கொள்ளப்பட்ட முறைபாடொன்றின் அடிப்படையில் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளினால் குற்றவியல் நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிறைவுபெறும் கட்டத்திலுள்ள ஆறு தடயவியல் கணக்காய்வுகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட பெறுகைச் செயன்முறையின் கால அட்டவணை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

| மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட முக்கிய வழிமுறைகள் தொடர்பான கால அட்டவணை ஒழுங்கு | திகதி/ காலம் |
|---|---|
| 2015 பெப்புருவரி 01 தொடக்கம் 2016 மாச்சு 31 வரையான காலப்பகுதியின் போது திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பாக பரீட்சித்துப் பார்க்கும் மற்றும் புலனாய்வு செய்யும் சனாதிபதி புலனாய்வு ஆணைக்குழுவின் அறிக்கை சனாதிபதியின் செயலாளர் திரு. ஒஸ்டின் பர்ணாந்துவிடமிருந்து கிடைக்கப்பெற்றது.<br>அதனைத் தொடர்ந்து மத்திய வங்கியுடன் தொடர்பான முக்கிய பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தவதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளும் இனங்காணப்பட்டன. | 10.01.2018 |
| இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது தடயவியல் கணக்காய்வுகளை நடாத்துவதற்காக உலகளாவிய நடைமுறையுடனும் சர்வதேச ரீதியான அனுபவத்துடன்கூடிய நிறுவனங்களின் பணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்தது. | 24.01.2018 |
| எடுக்கப்பட்ட பூர்வாங்க வழிமுறைகள்:<br>1. தடயவியல் கணக்காய்வுகளின் நோக்கெல்லையானது பெரும்பாலும் பின்வரும் விடயப்பரப்புகளில் இனங்காணப்பட்டிருந்தது:<br>அ. பொதுப்படுகடன் திணைக்களம் மூலம் திறைசேரி முறிகளை வழங்குதல்<br>ஆ. திறைசேரி முறிகள், பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பங்கு மூலதனங்களின் ஊழிய சேம நிதியத்தின் மூலமான முதலீடுகள்<br>இ. தெரிவுசெய்யப்பட்ட முதனிலை வணிகர்கள் தொடர்பில் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வகிபாகத்தினைக் கொண்டு நடாத்துவதன் மீதான பரிசோதனை<br>ஈ. இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் தொழிற்பாட்டு நோக்குகள்,.<br>2. மேற்கூறப்பட்ட பரந்த விடயப்பரப்புக்களுடன் தொடர்புடைய புலனாய்வு விடயப் பரப்புகள் 6 தடயவியல் கணக்காய்வுகளாக வகைப்படுத்தப்பட்டு உருவாக்கப்பட்டன. சொல்லப்பட்ட 6 தடயவியல் கணக்காய்வு விடயங்களுக்குமான விசாரணை நியதிகள் கௌரவ சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டன. ஒவ்வொரு விசாரணை நியதியினையும் நோக்கெல்லையினையும் நிர்ணயிப்பதற்கும் மீள் ஒழுங்கமைப்பதற்கும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பல சுற்றுக்களைக் கொண்ட உள்ளகக் கலந்துரையாடல்களும் ஆலோசனைகளும் இடம்பெற்றன.<br>3. பெறுகைகளுக்காக பின்பற்றப்படவேண்டிய நடைமுறையினை தீர்மானிப்பதற்கு கௌரவ சட்டமா அதிபரிடமிருந்து உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆலோசகர்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்புடைய தேசிய பெறுகைக் கையேடு மற்றும் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டுமென கௌரவ சட்டமா அதிபரினால் ஆலோசனை வழங்கப்பட்டது. அதற்கமைய, அதில் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச காலத் தேவைப்பாடுகளை கடைப்பிடித்து தேசிய ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.<br>4. விரிவான ஐந்து தடயவியல் கணக்காய்வுகளின் (தடயவியல் கணக்காய்வு 1-5) விசாரணை நியதிகளைக் கருத்திற்கொண்டு மத்திய வங்கியின் பல திணைக்களங்களின் தொழிற்பாடுகளையும் தடயவியல் கண்காய்வில் உலகளாவிய நடைமுறையினையும் சர்வதேச ரீதியான அனுபவத்துடனும் கூடிய கணக்காய்வு நிறுவனங்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான செலவு மதிப்பீடுகளையும் மையப்படுத்தி அமைச்சரவை நியமித்த ஆலோசனை பெறுகைக் குழுவொன்றினூடாக பெறுகைச் செயன்முறையினைக் கொண்டு நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | 25.01.2018 - 30.05.2018 |
| இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்ட நிறுவனங்களின் தொழிற்பாட்டு நோக்குகள் மீதான தடயவியல் கணக்காய்வு (தடயவியல் கணக்காய்வு 6) தொடர்பில் பெறுகைக்காக இலங்கை மத்திய வங்கியின் மூத்த அலுவலர்களை உள்ளடக்குகின்ற விலைக் கோரல் சபையொன்றினையும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றினையும் நாணயச் சபை நியமித்தது. | 23.05.2018 |
| தடயவியல் கணக்காய்வு 1-5 தடயவியல் கணக்காய்வுகளுடன் தொடர்புடைய பெறுகையானது ஒப்புதலுக்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான ஒப்புதல் கிடைக்கப்பெற்றது. | 30.05.2018 |
| திறைசேரிக்கான துணைச் செயலாளரின் தலைமையில் அமைச்சரவை நியமித்த ஆலோசனைப் பெறுகைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. | 07.06.2018 |
| அமைச்சரவை நியமித்த ஆலோசனைப் பெறுகைக் குழுவில் அவதானிப்பாளராக அமர்வதற்கு பெயர் குறிக்கப்பட்டவரின் பெயர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து கிடைக்கப்பெற்றது. | 14.06.2018 |
| அரசாங்க நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அமைச்சரவை நியமித்த ஆலோசனைக் குழு உறுப்பினர்களை நியமித்தல் | 14.06.2018 |
| முதலாவது கூட்டம் இடம்பெற்றது<br>• தடயவியல் கணக்காய்வு 1 - 5 இற்கான அமைச்சரவை நியமித்த ஆலோசனைப் பெறுகைக் குழு<br>• தடயவியல் கணக்காய்வு 6 இற்கான இலங்கை மத்திய வங்கி விலைக்கோரல் குழு | <br>20.06.2018<br>02.07.2018 |
| உள்ளூர் செய்தித் தாள்கள், பன்னாட்டு அச்சு ஊடகங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சு, வெளிவிவகார அமைச்சு என்பனவற்றின் வெப்தளங்களில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. மேலும், பத்திரிகைக் குறிப்பொன்று வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களுக்கு அனுப்பப்பட்டது.<br>• தடயவியல் கணக்காய்வு 1 - 5 இற்கான அமைச்சரவை நியமித்த ஆலோசனைப் பெறுகைக் குழு<br>• தடயவியல் கணக்காய்வு 6 இற்கான இலங்கை மத்திய வங்கி விலைக்கோரல் குழு | <br>24.06.2018<br>15.07.2018 |
| விளம்பரங்களுக்கு பதிலிறுத்தியவர்களுக்கு ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு அனுப்பப்பட்டதுடன் விளம்பரங்களுக்கு பதிலிறுத்துபவர்களிடமிருந்து ஆர்வ வெளிப்படுத்தல்களை சமர்ப்பிப்பதற்கான 30 நாட்களைக் கொண்ட இறுதித் திகதியொன்று வழங்கப்பட்டது.<br>• தடயவியல் கணக்காய்வு 1 - 5 இற்கான அமைச்சரவை நியமித்த ஆலோசனைப் பெறுகைக் குழு<br>• தடயவியல் கணக்காய்வு 6 இற்கான இலங்கை மத்திய வங்கி விலைக்கோரல் குழு | <br>25.07.2018<br>16.08.2018 |
| ஆர்வத்தை வெளிப்படுத்தலை சமர்ப்பித்த நிறுவனங்களின் தெரிவுப் பட்டியலை இறுதிப்படுத்தல்<br>• தடயவியல் கணக்காய்வு 1 - 5 இற்கான அமைச்சரவை நியமித்த ஆலோசனைப் பெறுகைக் குழு<br>• தடயவியல் கணக்காய்வு 6 இற்கான இலங்கை மத்திய வங்கி விலைக்கோரல் குழு | <br>24.08.2018<br>24.08.2018 |
| தெரிவுப் பட்டியலிடப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் வெளிப்படுத்தாமை உடன்படிக்கைகள் அனுப்பப்பட்டன.<br>• தடயவியல் கணக்காய்வு 1 - 5 இற்கான அமைச்சரவை நியமித்த ஆலோசனைப் பெறுகைக் குழு<br>• தடயவியல் கணக்காய்வு 6 இற்கான இலங்கை மத்திய வங்கி விலைக்கோரல் குழு | <br>30.08.2018<br>04.09.2018 |
| வெளிப்படுத்தாமை உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டதன் பின்னர் தடயவியல் கணக்காய்வு 1-5 இற்கான முன்மொழிவுகளுக்கான கோரிக்கை வழங்கப்பட்டது.<br>• தடயவியல் கணக்காய்வு 1 - 5 இற்கான அமைச்சரவை நியமித்த ஆலோசனைப் பெறுகைக் குழு<br>• தடயவியல் கணக்காய்வு 6 இற்கான இலங்கை மத்திய வங்கி விலைக்கோரல் குழு | <br>21.09.2018<br>12.10.2018 |
| முன்மொழிவுக்கு முந்திய மாநாட்டை நடாத்துதல்<br>• தடயவியல் கணக்காய்வு 1 - 5 இற்கான அமைச்சரவை நியமித்த ஆலோசனைப் பெறுகைக் குழு<br>• தடயவியல் கணக்காய்வு 6 இற்கான இலங்கை மத்திய வங்கி விலைக்கோரல் குழு | <br>09.10.2018<br>09.11.2018 |
| முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ளல் (முன்மொழிவுகள் சமர்ப்பிப்பதற்காக குறைந்தபட்சம் ஆறு வாரங்கள் வழங்கப்பட்டன)<br>• தடயவியல் கணக்காய்வு 1 - 5 இற்கான அமைச்சரவை நியமித்த ஆலோசனைப் பெறுகைக் குழு<br>• தடயவியல் கணக்காய்வு 6 இற்கான இலங்கை மத்திய வங்கி விலைக்கோரல் குழு | <br>02.11.2018<br>30.11.2018 |
| தடயவியல் கணக்காய்வு 1 - 5 இற்கான நிதியியல் முன்மொழிவுகளை திறத்தல். | 11.01.2019 |
| தடயவியல் கணக்காய்வு 6 இற்கான நிதியியல் முன்மொழிவுகளை திறத்தல். | 2019 சனவரி 01ஆம் வாரத்திற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது |

**தடயவியல் கணக்காய்வுக்கான பெறுகைச் செயன்முறை தொடர்பில் எதிர்காலத்தில் பின்பற்றப்படவுள்ள நடைமுறைகள்**

தேசியப் பெறுகை வழிகாட்டல்/ கையேட்டிற்கு அமைவாக மேற்குறித்த குறைந்தபட்ச தொழில்நுட்பப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விலைக்குறிப்பீட்டாளர்களுக்கு 10 நாட்கள் அறிவித்தல் வழங்கி நிதியியல் விலைக் குறிப்பீடுகள் திறக்கப்படும். அதன் பின்னர் தடயவியல் கணக்காய்வு 1 - 5 இற்காக தெரிவுசெய்யப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களுக்காக அமைச்சரவையினதும் தடயவியல் கணக்காய்வு 6 இற்காக நாணயச் சபையினதும் அவசியமான ஒப்புதல்களைப் பெற்றுக்கொண்டு தேசிய பெறுகை வழிகாட்டல் மற்றும் தேசிய பெறுகை கையேடு என்பவற்றில் எடுத்துரைக்கப்பட்ட அத்தகைய வேறு நடவடிக்கைகளை எடுத்து, சொல்லப்பட்ட தடயவியல் கணக்காய்வுகள்/ புலனாய்வுகள்/ பரிசோதனைகளைக் கொண்டு நடாத்துவதற்கான ஒப்பந்தங்கள் 2019 பெப்புருவரியில் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கணக்காய்வுகளுக்கான காலம் ஒவ்வொரு விசாரணை நியதிகளுடனும் தொடர்புபட்ட பணிகளைப் பொறுத்து 3 தொடக்கம் 9 மாதங்கள் வரையிலான கால வீச்சைக் கொண்டதாகவிருக்கும்.

இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01
011 - 2477418 011 - 2346304 dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk